மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com




குரல் - 79 | 11.06.2023 (ஞாயிற்றுக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00





பக்கம் 5

# யாழில் 33 வருடங்களின் பின் விடுவிக்கப்படவுள்ள காணிகள்

**யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மாங்கொல்லை வைரவர் ஆலயம் மற்றும் அதனை சூழவுள்ள சில பகுதிகள் 33 வருடங்களின் பின்னர் மீள கையளிக்கப்படவுள்ளது.**



பக்கம் 5

## மகாவலி கே, ஜே வலயங்களை கைவிடுங்கள்:

### சார்ள்ஸ் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்

மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான கே மற்றும் ஜே வலயங்களை உருவாக்குவதற்கான திட்டத்தினை முழுமையாக கைவிடுமாறு கோரி இலங்கை தமிழரசு கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதத்தினை கையளித்துள்ளார்.

அந்த கடிதத்தில் மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் மகாவலி அபிவிருத்தித்

# இழுத்தடிப்புக்கள் மூலமான தீர்வினை நீர்த்துப் போகச் செய்வதற்கு முயன்றால் வெளியக சுயநிர்ணயத்தைக் கோரும் நிலைமை ஏற்படும்!

## அரசாங்கத்திற்கு சம்பந்தன் எச்சரிக்கை!!



பக்கம் 5

## ஜனாதிபதியை மிரட்டும் சம்பந்தன் குழுவினர்..!

### ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்: சரத் வீரசேகர எச்சரிக்கை..!



பக்கம் 5

"சம்பந்தன் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மிரட்டி தாம் நினைக்கும் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பகல் கனவு காணக்கூடாது எனவும்

## விடுதலைப்புலிகளால் பல்வேறுகாலகட்டங்களில் பல தமிழ் அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்:

### அலிசப்ரி தெரிவிப்பு – ஆனந்த சங்கரிக்கு பாராட்டு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கரியை பாராட்டும் டுவிட்டர் பதிவொன்றை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி வெளியிட்டுள்ளார். ஆனந்த சங்கரி குறித்து வெளியாகியுள்ள கட்டுரையை பகிர்ந்துகொண்டுள்ள அவர் ஆனந்த சங்கரி குறித்த பதிவினையும் வெளியிட்டுள்ளார். அலிசப்ரி அந்த பதிவில் தெரிவித்துள்ளதாவது

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல்ரீதியில் தங்களுடன் உடன்படமறுப்பவர்களையோ தமிழர்கள் மத்தியில் விமர்சனங்களையோ ஏற்றுக்கொள்ளவில்லை.

பக்கம் 5

## யூலை 10ற்குள் தீர்வு வேண்டும்..! இல்லையெனில் சர்வதேசத்திடம் செல்வோம்: சாணக்கியன் கடும் முடிவு.!



எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதிக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாவிட்டால் சர்வதேச சமூகத்திடம் செல்லப் போவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 5

## தமிழ் மக்களின் இரத்தங்களை சூடாக்கி குளிர்காயும் நபர்களின் தலைவராக சம்பந்தன்..!

### தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ரணிலிடம் தீர்வில்லை..!



பக்கம் 5

தமிழ் மக்களின் இரத்தங்களை சூடாக்கி குளிர்காயும் நபர்களின் தலைவராக சம்பந்தன் ஐயா காணப்படுகின்றார். கடந்த காலம் முதற்கொண்டு தீர்வு எதிர்காலத்தில் வரும் எனவும் கடும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக கருத்து வெளியிடுவதில் சம்பந்தன் ஐயா சிறந்தவராக காணப்படுகின்றார் என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன்

# கண்ணிவெடி அகற்றுவோரின் ஆற்றல் விருத்திக்கு

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




கண்ணிவெடி அகற்றும் முன்னணி நிறுவனமாக ஆயுபு (மக்) தனது நிறுவனத்தில் பணியாற்றும் 230 ஊழியர்களுக்கு நிதிசார் அறிவுப் பயிற்சி, பேச்சு சிங்களம் (நிலை 1 மற்றும் நிலை 11), விவசாயம், ஆங்கில மொழி (நிலை 1), தகவல் தொடர்பாடல் தொழிலநுட்ப பயிற்சி , தமிழ் எழுத்தறிவு (நிலை 1) போன்ற பல்வேறு பயிற்சிகளினை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்திருந்தது.

இந்நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக இலங்கையிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகர் (அபிவிருத்தி) மற்றும் ஒத்துழைப்புத் தலைவரான திருமதி. லிண்டா எஹ்ரிச்ஸ், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் டிரெவர் லுடோவிக், வவுனியா மாவட்டச் செயலாளர் பி.ஏ.சரச்சந்திர மற்றும் திருமதி கிறிஸ்டி மெக்லென்னன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கைது



வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெறுவரும் கொலை வழக்கு தொடர்பாகவே இந்த கைது இடம்பெற்றுள்ளது

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது

முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பயணித்த வாகனம் வவுனியா செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கியதில் அவருடைய மெய்பாதுகவாலர் ஒருவர் உயிரிழந்திருந்தார்

குறித்த வழக்கு மேல் நீதிமன்றத்தில் விசாரனையில் இடம்பெற்றுவரும் நிலையில் குறித்த விபத்தின் சாட்சியை அச்சுறுத்தியிருந்தார் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முன்னை நாள் பிரதேச சபை உறுப்பினரும் சிறீலங்கா சுதந்திர கட்சியின் வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை வேட்பாளருமான துஷ்யந்தன் விக்டர் ராஜ் என்பவர் மீது சாட்சியாளர் மன்றில் முறையிட்டிருந்தார்

இதனை விசாரனை செய்த வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் குறித்த நபரை நேற்று கைது செய்து நீதிமன்றில் முன்னிலை படுத்தியிருந்தனர் இந்நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றில் அறிவிக்கப்பட்டருந்தது

எனினும் குறித்த வழக்கில் சந்தேக நபர் பினை கோறுவதாக இருந்தால் உயர் நிதிமன்றினூடாகவே கோற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது

# வெளிநாட்டில் இருந்து வருகை தந்த இருவர் வவுனியாவில் எச்.ஐ.வி தொற்றுடன் அடையாளம்




வெளிநாட்டில் இருந்து வருகை தந்த இருவர் வவுனியாவில் எச்.ஐ.வி தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இருவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறு இனங்காணப்பட்ட இருவரும் ஆண்களாவர்.

வவுனியா மாவட்டத்தில் எச்.ஐ.வி சிகிச்சைப் பிரிவு 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டத்தில் இருந்து கடந்த டிசம்பர் வரை 30 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் சிகிச்சைக்கு பிநதிய நிலையில் வந்தவர்கள் மற்றும் சீராக சிகிச்சை பெறாத 7 ஆண்களும் 5 பெண்களுமாக 12 பேர் இறந்துள்ளனர்.

ஏனையவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்போது அடையாளம் காணப்பட்டவர்களுக்கும் அதற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கிழக்கு மாகாண விவசாய நவீனமயமாக்கலில் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் 350 பேருக்கு கிழக்கு ஆளுநர் நீர்ப்பம்பிகள் வழங்கி வைப்பு!






கிழக்கு மாகாணத்தில் விவசாய நடவடிக்கைகளை நவீனமயமாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழை மற்றும் மாதுளை பழ உற்பத்தியில் ஈடுபடும் 350 விவசாயிகளுக்கு முதற்கட்டமாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நீர்ப்பம்பிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை (10.06.2023) மட்டக்களப்பு, கல்லடி சன்சைன் கிறான்ட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் அதிதிகளாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான். இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன்,தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் இணை செயலாளர் பிரசாந்தன், மாகாண பிரதித் திட்டப் பணிப்பாளர் கே.கருணாகரன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, மற்றும் பிரதேச செயலாளர்கள் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கிழக்கு மாகாண உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது விவசாயிகள் ஆளுநருக்கு பொன்னாடை போத்தி கௌரவித்ததுடன் அறுவடை செய்யப்பட்ட வாழைப்பழத்தை வழங்கிவைத்தனர். இதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட விவாயிகளுக்கு 350 நீர்ப்பம்பிகள் ஆளுநர் வழங்கிவைத்தார்.

# மன்னார் கரிசல் கப்பலேந்தி மாதா ஆலயம் உடைத்து திருட்டு!



மன்னார் கரிசல் கிராமத்தில் அமைந்துள்ள கப்பலேந்தி மாதா ஆலயத்தில் கதவுகள் உடைத்து உண்டியல் உட்பட நற்கருணை கிண்ணம் உட்பட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் இனந்தெரியாத விஷமிகளால் நேற்று முன்தினம் (9) இரவு இடம் பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் நேற்றைய தினம் (10) வவுனியா தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ் மாவட்டத்தில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள்..! பொலிசார் தகவல்...!

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 5 மாதங்கள் வரையில் யாழ் மாவட்டத்தில் சுமார் 277 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மே மாதம் 31 ஆம் திகதிவரையில் சுமார் 277 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன.

எனினும் யாழ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அதிகளவான குற்றச்செயல்கள் கதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண பொலிசார் வழங்கியுள்ள தகவலின் அடிப்படையில் யாழ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 109 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 44 குற்றச்செயல்களும் சுண்ணாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 30 குற்றச்செயல்களும் பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவு – 17

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவு -26

மானிப்பாய் பொலிஸ் பிரிவு – 19

கொடிகாமம் பொலிஸ் பிரிவு – 08

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவு– 6

நெடுந்தீவு பொலிஸ் பிரிவு – 18

குற்றச் செயல்களும் 5 மாதங்களில் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.









# கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது : இனப்படுகொலையை அம்பலப்படுத்தும் குரலை நசுக்கும் ஒரு நடவடிக்கை!.. அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் பேரவை!!

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை தமிழ் இனப்படு கொலையை அம்பலப்படுத்தும் அவரின் குரலை நசுக்கும் ஒரு நடவடிக்கை என அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.

மருதங்கேணியில் இடம்பெற்ற தனக்கு எதிரான வன்முறைகள் குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திட்டமிட்டிருந்தவேளை ஏழாம் திகதி பொலிஸார் அவரை கைதுசெய்தனர் என அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதை தடுப்பதற்காக அவரை நாடாளுமன்றத்திற்கு கொண்டுசென்றனர் என தெரிவித்துள்ள புலம்பெயர் தமிழர் அமைப்பு தமிழர்களிற்காக குரல்கொடுத்தமைக்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தந்தை குமார் பொன்னம்பலமும் கொல்லப்பட்டார் என்பதை நினைவுகூற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

வேறு நான்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர் ஆனால் இது வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல்வாதிகளிற்கு எதிரான அரச ஒடுக்குமுறையை ஏற்றுக்கொண்டால் கண்டிக்க தவறினால் சாதாரண தமிழ் மக்கள் பொலிஸாரிடமிருந்து எவ்வாறான நிலையை எதிர்கொள்வார்கள் என்பதை சர்வதேச சமூகம் நினைத்துப்பார்க்கவேண்டும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனிற்கு எதிரான சம்பவத்திற்கு ஒரு வாரத்தின் பின்னர் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது- இது ஐக்கியநாடுகள் மனித உரிமை பிரகடனத்தின் பல சரத்துக்களை மீறி இலங்கையில் தமிழர்களிற்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஒடுக்குமுறையின் தொடர்போக்கை வெளிப்படுத்தியுள்ளது எனவும் ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.

இந்த வன்முறைகள் மற்றும் தமிழ் மக்களை அச்சுறுத்தும் தந்திரோபாயங்களிற்கு எதிராக சர்வதேச சமூகம் எந்தவித தயக்கமும் இன்றி கண்டனத்தை தெரிவிக்க வேண்டும் என அனைத்துல ஈழத்தமிழர் மக்களவை வேண்டுகோள் விடுத்துள்ளது.
அரசாங்கம் தான் பிரதிநிதித்துவம் செய்வதாக தெரிவிக்கும் தமிழ்மக்களின் உரிமைகளை மீறுவது அலட்சியம் செய்வதை நிறுத்தவேண்டும் என்ற தெளிவான செய்தியை சர்வதேச சமூகமும் மனித உரிமை அமைப்புகளும் ஜனநாயகம் மனித உரிமைகளை பெறுமதிமிக்கவையாக கருதுபவர்களும் தெரிவித்தால் மாத்திரமே நீதி நிலைநாட்டப்படும் என புலம்பெயர் தமிழர் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆக்கிரமித்துள்ள படையினர் தமிழ்மக்களை வன்முறை ரீதியில் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர் என்பதை மேற்சொன்ன சம்பவங்கள் புலம்படுத்துகின்றன, யாழ்ப்பாணம் தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக பௌத்த ஆலயத்தை அமைக்கும் நடவடிக்கைகளிற்கு எதிராக கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அவரது கட்சியினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் இலங்கையில் சிங்களவர்கள் சட்டத்திற்கு அப்பாற்றபட்டவர்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.

# மாகாண சபைக்கான ஆலோசனைக்குழு ஒன்றை அமைக்கும் ஏற்பாடானது எங்களது நிலைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் : சுரேந்திரன் குருசாமி



ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டு அல்லது முன்வைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைக்கான ஆலோசனைக்குழு ஒன்றை அமைக்கும் ஏற்பாடானது, ஏற்கனவே நாங்கள் கோரிக்கை வைத்திருக்கும், மாகாண சபை தேர்தலை நடாத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிப்பதாக அமைகிறது என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,
அரசியல் யாப்பிலே ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களை பகிர்ந்து, மாகாண சபை தேர்தல் சட்டத்தில் அதற்கான திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்ற அனுமதியை பெற்று மாகாண சபை தேர்தலை நடாத்துமாறு எமது கோரிக்கை அமைந்திருந்தது. அதை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டு, அந்த மாகாண சபையில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள நிலை நிறுத்துவதற்கான சட்ட வரைபுகளை தான் ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்த சட்ட வரைபுகளோடு தேர்தல் திருத்த சட்டத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது அனுமதி பெற்று மாகாண சபைகளில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள நிறுத்தி, மாகாண சபை தேர்தலை நடாத்தலாம் என உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால் இதுவரைக்கும் அந்த விடயங்கள் தொடர்பான தெளிவான கருத்துக்கள் எதுவும் ஜனாதிபதியால் கூறப்படவில்லை.

இந்த நிலையிலே ஆலோசனைக்குழு ஒன்றை அமைத்து மாகாண சபையை வழிநடத்துவதற்காக ஜனாதிபதி எடுக்கின்ற முயற்சியும், அதை எமது தமிழர் தரப்பினரே அரசியல் கோரிக்கையாக முன்வைத்திருப்பதும் கவலையளிக்கிறது.

ஜனாதிபதியுடைய மாகாண சபை வழிநடத்தல் குழு என்பது அவரால் அமைக்கப்பட வேண்டிய ஒன்று, அதனை நாங்கள் வலிந்து கேட்பது அவசியமற்றது. அது ஏற்கனவே ஒரு நிர்வாகம் சம்பந்தப்பட விடயம். நாங்கள் கேட்பது அரசியல் நிலைப்பாடு. அதாவது மாகாண சபை தேர்தல்களை நடாத்த வேண்டும், பறிக்கப்பட்ட அதிகாரங்களோடு ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது ஒரு அரசியல் கோரிக்கை.

ஆகவே, நாங்கள் இந்த அரசியல் கோரிக்கைக்கு புறம்பான ஒரு நிர்வாக ரீதியான ஆலோசனை சபையை அமைக்கும் விடயத்தை கோரிக்கையாக, அதாவது அரசியல் கோரிக்கையாக முன்வைப்பது அபத்தமானது ஆகும். அது ஜனாதிபதி அவருடைய தேவை கருதி எடுக்க வேண்டிய நடவடிக்கை. ஆகவே நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டில் இருக்க இருக்க வேண்டியதில் அனைத்து தமிழ் தரப்பும் உறுதியாக இருக்க வேண்டும்.

மாறாக தனித்து செயற்பட முற்படுகின்ற போது, எமது பிரதான கோரிக்கையான அதிகாரப் பகிர்வு, மாகாண சபை தேர்தலை விரைந்து நடாத்துதல் என்ற விடயங்களுக்கு இவை குந்தகம் விளைவிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி, தேர்தல்களைப் பிற்போடுவதற்கு இதைப் பயன்படுத்துகின்ற அபாய சூழ்நிலை இப்போது எழுந்திருக்கிறது. இதற்கு சம்பந்தப்பட்ட அரசியல் தரப்பினர் பொறுப்பு கூற வேண்டும் என்பது எங்களது நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.






# கல்முனையில் A/L டியூசன் வகுப்புகளை 30ஆம் திகதி வரை தாமதப்படுத்துங்கள் மாநகர ஆணையாளர் அறிவுறுத்தல்



கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் க.பொ.த. உயர்தர புதிய மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்காமல், இம்மாதம் 30ஆம் திகதி வரை தாமதப்படுத்துமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி வலியுறுத்தியுள்ளார்.

க.பொ.த. சாதாரண தர பரீட்சை நிறைவடைந்துள்ளதையடுத்து க.பொ.த. உயர்தர டியூசன் வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு பல டியூட்டரிகள் ஏட்டிக்குப் போட்டியாக விளம்பரப்படுத்தியுள்ள நிலையில், அறிக்கை ஒன்றின் ஊடாக கல்முனையிலுள்ள அனைத்து தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களை அவர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

பல்வேறு அர்ப்பணிப்புக்கள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் க.பொ.த சாதாரணதர பரீட்சையினை நிறைவு செய்திருக்கின்ற மாணவர்களும் பெற்றோர் மற்றும் கல்விச் சமூகத்தினரும் எம்மிடம் சுட்டிக்காட்டியமைக்கு அமைவாகவே இவ்வறிவுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர்தர கல்விக்கான தத்தமது துறைகளை தேர்வு செய்வதற்கும் உரிய தயார்படுத்தல்களுக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு போதிய கால அவகாசமும் சுதந்திரமும் வழங்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

எனவே, இவற்றை கவனத்தில் கொண்டு கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இவ்வகுப்புக்களை ஆரம்பிக்காது இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தனியார் கல்வி நிலையங்களுக்கு மாநகர சபையினால் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடனான வியாபார உத்தரவுப்பத்திரத்தின் பால் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன் தவறும் பட்சத்தில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சம்மந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என்பதையும் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்று கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யூரியாவுடன் இலங்கையை வந்தடைந்த கப்பல்..! உரங்களின் விலை 4,500 ரூபாவால் குறைப்பு..!



ஓமானில் இருந்து 22 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் யூரியா உரத்துடன் கப்பலொன்று நாட்டை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் குறித்த கப்பலில் உள்ள உரம் இறக்குமதி செய்யப்பட்டு, விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை உரங்களுக்கான நிவாரணங்களை அரசாங்கம் வழங்கி வரும் நிலையில் அடுத்த வாரம் முதல் யூரியா உரம் மூடையொன்றை 9 ஆயிரம் ரூபாவுக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் அண்மையில் பாராளுமன்றில் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது 19ஆயிரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்படும் எம்.வி.பி உரம் மூடையொன்றுக்கு 4ஆயிரத்து 500 ரூபா விலைக் குறைப்புடன் 15ஆயிரம் ரூபாவுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# காணாமல்போனவர்களின் குடும்பத்தவர்கள் அனுபவித்து வரும் துன்பங்களிற்கு தீர்வை வழங்கவேண்டும்!

## அலிசப்ரியிடம் செஞ்சிலுவை பிரதிநிதிகள்



காணாமல்போனோரின் குடும்பத்தினர் நீண்டகாலமாக அனுபத்துவரும் துன்பத்துக்கு உடனடியாகத் தீர்வை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிறிஸ்டின் சிபோல்லா மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது.

# ஊழல் மோசடி நிரூபிக்கப்பட்ட நாவிதன்வெளி முன்னாள் தவிசாளருக்கு எதிராக இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை



நாவிதன்வெளி பிரதேசசபை முன்னாள் தவிசாளரால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடி நடவடிக்கைகளில் விசாரணையின் போது நிரூபிக்கப்பட்ட 13 குற்றச்சாட்டுகள் தொடர்பில் தவிசாளருக்கு எதிராக இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட முன்னாள் தவிசாளர் அரச தரப்பில் இருந்து கொண்டு ஏனைய முன்னாள் உறுப்பினர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். அவருக்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டே ஆக வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தனதுரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நாட்டைப் பொருத்த மட்டில் இன்று அந்நிய செலவாணியை எதிர்பார்க்கின்ற நாடாகவே இருந்து கொண்டிருக்கின்றோம். இன்று எமது நாட்டின் இளைஞர் யுவதிகள் இந்த நாட்டின் பொருளாதார சுமைக்கு முகங்கொடுக்க முடியாமல் தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு வெளிநாடுகளுக்குச் செல்லுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

மேற்கத்தேய நாடுகளில் இலங்கையைத் தாயகமாகக் கொண்ட அதிகளவான மக்கள் வாழுகின்றார்கள். அங்கு அவர்களுக்கான சேவைகளைத் துரிதப்படுத்துவது எமது நாட்டின் குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தின் தலையாய கடமையாகும். எமது நாட்டின் குடிவரவு குடியகழ்வுத் திணைக்கத்தின் பெரும்பாலான வேலைத்திட்டம் கடவுச் சீட்டு வழங்குவதாக இருந்தாலும், எமது நாட்டில இருக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கான கடவுச் சீட்டுகளைப் புதுப்பிப்பதில் சில தாமதங்கள் ஏற்படுகின்றன. இதற்கான ஒரு செயற்பாட்டினை உரிய அமைச்சர் அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும். பலர் இவ்வாறு எமது நாட்டின் பிரஜாவுரிமையை இரத்துச் செய்து வெளியேறிய வரலாறுகளும் உண்டு.

தேசிய அடையாள அட்டை புதுப்பிக்கும் போதுகூட காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே இவற்றை இலகுபடுத்தக் கூடிய வகையிலே உரிய திணைக்களங்களின் நடவடிக்கைகள் இருக்க வேண்டும். எமது நாட்டுக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளாக இருக்கலாம், எமது நாட்டில் வசிக்கும் உறவுகளைப் பார்க்க வருகின்ற புலம்பெயர்ந்த உறவுகளாக இருக்கலாம் அவர்கள் இங்கு வருகின்ற போது சொல்ல முடியாத அசௌகரியங்களை அனுபவிக்கின்றார்கள். அவ்வாறில்லாமல் இவ்வாறான துரிதப்படுத்தல்கள் மூலம் அவர்களுக்குரிய நடவடிக்கைகளை இலகுபடுத்த வேண்டும்.

செலவீனங்களைக் குறைத்து மிக இலகுவில் கடவுச்சீட்டுகளைப் பெற வேண்டும் என்ற அடிப்படையில் தற்போது அரசாங்கம் பிரதேச செயலகங்களினூடான விடயங்களை முன்னெடுத்து வருகின்றது. இது வரவேற்கத்தக்க விடயம். இதனை இன்னும் விரிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலே பொத்துவில், சம்மாந்துறை என்ற பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பொத்துவில் இருந்து சம்மாந்துறை என்று பார்க்கின்ற போது ஐம்பது ஆறுபது கிலோமீட்டர்கள் வரை இருக்கின்றது எனவே இடையில் இருக்கின்ற ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திலும் மேற்படி நடைமுறைகளைப் பேணுவதற்கும் அப்பிரதேச செயலகத்தை தெரிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கின்றேன்.

எமது நாட்டைப் பொருத்தமட்டில் மத்திய, மாகாண, உள்ளூராட்சி என்ற ரீதியில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆனால் உள்ளூராட்சி மன்றங்களைப் பொருத்தமட்டில் ஒரு சிறந்த நிருவாகத்தைச் செய்கின்ற இடமாக அது இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்திலே அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேசசபை சம்மந்தமானதொரு பதிவை நான் இங்கு முன்வைக்க வேண்டும். குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு எமது நாவிதன்வெளி பிரதேசசபையில் அதன் தவிசாளரால் மேற்கொள்ளப்படுகின்ற ஊழல் விடயங்கள் தொடர்பில் உறுப்பினர்கள் இணைந்து ஒரு கடிதம் 2022.08.12ம் திகதி அனுப்பியிருந்தார்கள். அதன் பிற்பாடு அங்கு இடம்பெறும் மோசடிகள் குறித்து விசாரணை இடம்பெற வேண்டும் என்று அப்பிரதேச சபையின் தவிசாளர் தவிர்த்து ஏனைய அனைத்து உறுப்பினர்களும் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதன் பிரகாரம் விசாரணைகள் இடம்பெற்றன. 13 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன. தற்போது சபை கலைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்தக் குற்றங்கள் புரிந்த தவிசாளருக்கு எதிராக ஒரு நடவடிக்கை கூட எடுக்கவில்லை. தற்போது அவர் அரச தரப்பில் இருந்து கொண்டு தனக்கெதிராக ஒப்பமிட்டவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இது ஒரு பிழையான நடைமுறை. அரச சொத்துக்களையும், அரச உடமைகளையும் துஸ்பிரயோகம் செய்பவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே நாவிதன்வெளி பிரதேசசபை சம்மந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். நாங்கள் இலஞ்சம் ஊழலுக்கு எதிரானவர்கள், எமது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்று நிற்பவர்கள்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் கனகர் கிராமம் என்ற கிராமத்தில் குறிப்பாக 1987ம் ஆண்டு இனக்கலவரத்தின் மூலம் குடியெழுப்பப்பட்ட மக்கள் ஜனாதிபதி மற்றும் எமது மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சகோதரர் வீரசிங்க அவர்களின் ஒத்துழைப்புடன் தற்போது அங்கு மீள்குடியேற்றம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பித்திருக்கின்றார்கள். அந்த வகையிலே ஜனாதிபதி, எமது மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் இவ் உயரிய சபையில் எமது மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

## யாழில் 33 வருடங்களின் பின்...

கடந்த 33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக J/ 233 கிராம சேவையாளர் பகுதியில் உள்ள மாங்கொல்லை வைரவர் ஆலயமும் அதனை சூழவுள்ள தனியார் காணிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

மிக விரைவில் , அவை மக்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.

## மகாவலி கே, ஜே வலயங்களை...

திட்டத்தின் கீழான கே மற்றும் ஜே வலயங்களை உருவாக்குவதற்காக மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகங்களில் காணிகள் மற்றும் இதர விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த இரு வலயங்களையும் உருவாக்கி விஸ்தரிக்க முயல்வதால் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் பறிபோவதுடன் மக்கள் குடிப்பரம்பலில் மாற்றம் நிகழ்வதற்கான சூழல்களும் உள்ளன.

குறிப்பாக, ஜே வலயத்தினை முன்னெடுப்பதன் ஊடாக 37 கிராமங்களை இழக்க வேண்டிய நிலைமைகள் காணப்படுகின்றன. அத்துடன், குறித்த வலயங்களுக்கு மகாவலி கங்கையின் நீர் கொண்டுவரப்படுவதும் கேள்விக்குறியான விடயமாகும்.

எனவே, மக்களின் நன்மை கருதி மேற்படி இரு வலயங்களுக்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்காதிருக்குமாறு தீர்மானமொன்றை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றுள்ளது.

## இழுத்தடிப்புக்கள் மூலமான...

தமிழ் மக்கள் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமது அபிலாஷைகளை பூர்த்தி செய்துகொள்வதையே விரும்புகின்ற நிலையில், இழுத்தடிப்புக்கள் மூலமான தீர்வினை நீர்த்துப் போகச் செய்வதற்கு முயன்றால் வெளியக சுயநிர்ணயத்தைக் கோரும் நிலைமை ஏற்படும் என்று இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் கடந்த வியாழக்கிழமை நடத்திய பேச்சுவார்த்தை, அதோடிணைந்த எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நாம் பேச்சுவார்த்தையில் முழுமையான திருப்தியைக் காணவில்லை. இருப்பினும் அவர்களின் கூற்றுப்படி எடுக்கப்படும் முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்புக் களை வழங்குவதற்கு தயாராகவே உள் ளோம்.

இருப்பினும், அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைளை கடந்த பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி முன்னெடுப்பதாக கூறியிருந்தார். எனினும் அதுதொடர்பில் இன்னமும் ஆக்கபூர்வமான கருமங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக நீண்டகாலமாக போராடி வருகின்றார்கள். அவர்கள் வடக்கு கிழக்கில் சரித்திர பூர்வமாக வாழ்ந்து வருபவர்கள். ஆகவே அவர்கள் சுயநிர்ணய உரித்தினைக் கொண் டுள்ளார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின் றார்கள்.

அதன்பிரகாரம் அரசாங்கம் பிரிக்க முடியாத, பிளவுபடுத்தப்படாத ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை வழங்க வேண்டும்.

இந்த விடயத்தில் அரசாங்கம் தொடர்ச்சியாக காலத்தினை இழுத்தடித்துச் செல்ல முடியாது. இவ்வாறான நிலைமை தொடர்வதன் ஊடாக தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தினை நீர்த்துப் போகச் செய்ய முடியும் என்று கருதலாம்.

ஆனால், தமிழ் மக்களுக்கான உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும் பட்சத்தில் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கான நிலைமையே ஏற்படும். இதற்கான, ஏற்பாடுகள் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சட்டங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே அவ்விதமானதொரு சூழல் ஏற்படுவதற்கு அரசாங்கம் இடமளிக்காது கருமங்களை விரைந்து முன்னெடுக்க வேண்டும். அரசியல் தீர்வு சம்பந்தமான விடயம் அரசாங்கத்தின் கைகளில் தான் உள்ளது. ஆகவே அரசாங்கம் இதய சுத்தியுடன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். அந்தச் செயற்பாட்டிலிருந்து விலகி நிற்கமுயாது என்றார்.

## விடுதலைப்புலிகளால் பல்வேறு...

விடுதலைப்புலிகளின் கட்டளைகளிற்கு அடிபணியாத அல்லது அதனை மீறத்துணிந்தவர்கள் இரக்கமற்ற முறையில் கையாளப்பட்டனர்.

விடுதலைபுலிகளை பல்வேறுகாலகட்டங்களில் புண்படுத்திய பல தமிழ் அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

புலிகளும் அவர்களுடன் இணைந்து பயணித்தவர்களும் ஆனந்தசங்கரியை துரோகி என அவதூறாக கண்டித்துள்ளனர் ஆனால் இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதை சரியாக புரிந்துகொண்ட சரியாக சிந்திக்கும் அனைவரும் ஆனந்தசங்கரியின் அர்ப்பணிப்பையும் துணிவையும் பாராட்டியுள்ளனர் எனவும் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியை மிரட்டும் சம்பந்...

அதற்கு நாம் அனுமதியோம் எனவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதிக்கும் சம்பந்தன் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு பகிரங்கமாக இடம்பெற வேண்டும். அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் தமிழ், முஸ்லிம், சிங்களக் கட்சிகள் கலந்துகொள்ள வேண்டும்.

ஒற்றையாட்சியை நீக்கிவிட்டு நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் சமஷ்டி முறையிலான ஆட்சியை வடக்கு கிழக்கில் நிறுவலாம் என சம்பந்தன் அணியினர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவும் இதற்கு ஆதரவு தரும் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

ஆனால், அவர்களின் இந்த நோக்கங்கள் நிறைவேற நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தீர்மானத்தை மீறி எதையும் செய்யமாட்டார் என்பது எமக்கு நன்கு தெரியும் எனவும் தெரிவித்தார்.

## யூலை 10ற்குள் தீர்வு வேண்டும்...

நேற்று முன்தினம் சிங்கள ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்திய போதிலும் இதுவரையில் தீர்வு காணப்படவில்லை எனவும் ஜனாதிபதிக்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு இந்த மாதம் 30ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தீர்வு காணத் தவறினால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மக்களின் இரத்தங்களை...

தெரிவித்தார். யாழில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு பொருளாதார ரீதியாக அதால பாதாளத்தில் விழுந்துள்ளது. அதன் விளைவாக விலைவாசி அதிகரிப்பு, மின் கட்டண அதிகரிப்பால் மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

நூற்றுக்கு 42 சதவீதமான பிள்ளைகள் மந்த போசனை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதனுடன் வறுமையால் பாதிக்கப்பட்டோர் தொகையானது 60 இலட்சத்திலிருந்து 90 இலட்சத்தை கடந்துவிட்டதாக புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மக்கள் ஒருவேளை உணவை சாப்பிடும் நிலை காணப்படுகின்றது. இதற்கு கடந்த 75 ஆண்டுகளாக தூரநோக் கற்ற ஆட்சியை முன்னெடுத்த ஆட்சி யாளர்களே காரணம்

இவற்றிலும் 69 இலட்சம் வாக்குகளை பெற்று தூரநோக்கற்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் மக்களை மேலும் பிரச்சினைக்குள் தள்ளி யுள்ளனர்.

உரகட்டுப்பாடு இரசாயன கட்டுப்பாட்டால் விவசாயிகள் பாதிப்படைந்து வீதியில்இறங்கி போராடினார்கள். கடந்த 25 வருடமாக இருக்கும் பொருளா தாரக்கொள்கையில் மாற்றம் வேண்டுமென மக்கள் போராடினார்கள். அதன் விளைவாக ராஜபக்சாக்கள் அடித்து துரத்தப்பட்ட நிலை காணப்பட்டது.

அதன் பின் அவர்களுக்கு நன்றிக்கடன் சேவகம் செய்ய ரணில் ஆட்சிக்கு வந்தார். கடந்த தேர்தலில் ரணிலின் விருப்பு வாக்குகளை கூட எண்ண முடியாத நிலை காணப்பட்டது. அந்த வகையில் ராஜபக்சாக்களையும் அவர்களின் ஊழலையும் பாதுகாக்கும் நடவடிக்கையை மேற் கொள்கின்றார்.

2022 ம் ஆண்டு ஊடகங்களுக்கு ஆணைக்குழு அமைக்க வேண்டு மென அமைச்சரவையில் கூறப்பட்டது. அதன் பரிசீலனைக்கமைய ஒரு குழு அமைக்கப்பட்டு இன்று ஊடக ஒழுங்கமைப்பு சட்டமுலம் உருவாக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தால் பல் வேறு வாத பிரதிவாதங்கள் காண ப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டு வரப்படும் சட்டம் ஊடக அடக்கு முறையே ஆகும். மக்களின் கருத்துக்கள், ஊடகவியளாளர்களை வேட்டையாடும் சட்டமூலமாகவே காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இவ்வாறு நீக்கப் பட வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை கொண்டு வந்து அதன் மூலமே நீக்கமுடியுமான வரையறை காணப்பட்டது. ஆயினும் தற்போது இச் சட்டமூலத்திற்கு அமைக்கப்பட்ட குழுவிலிருந்து நபர்களை நீக்குவதா இணைப்பதா என்பதை தீர்மானிப்பது ஜனாதிபதியே ஆகும். தனக்கெதிராக செயற்படுபவர்களை கூண்டோடு அழிக்க முடியும் என்பது வெளிப்படையாக தெரியும் விடயம்.

இவ் ஆணைக்குழுவிற்கு ஊடகங்களில் வெளியிடப்படும் கருத்துக்களை பரிசீலிக்கும் உரிமை உண்டு. ஆகவே அரசிற்கு எதிராகவோ ஜனாதி பதிக்கெதிரான கருத்துக்களை வெளிப் படுத்துமிடத்து இவ் ஆணைக்குழு மூலம் மீள் பரிசீலனை செய்யப்படும். இத்துடன் உரிமைப் பத்திரத்தை ஒவ் வொரு வருடமும் புதுப்பிக்க வேண் டிய நிலைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

ஆணைக்குழு ஜனாதிபதியின் கட்டுப் பாட்டின் கீழுள்ள நிறுவனமாகவே காணப்படுகின்றது. மக்களால் வெறுத்தொதுக்கப்படும் ரணில் விக்கிரம சிங்க மக்களை வேட்டையாடும் நப ராக காணப்படுகின்றார்.

நாட்டில் எரிபொருள் , எரிவாயு போதி யளவு காணப்படுகின்றது. ரணிலின் சாதனை என மக்கள் மத்தியில் கரு த்து நிலவுகிறது. கடந்த 40வருடங் களுக்கு மேலாக பாராளுமன்றில் பல் வேறு பதவிகளை வகித்து மக்களுக்கு ஒன்றையும் செய்யமுடியாத ரணில் விக்கிரமசிங்க தற்போது பிரச்சினைகள் தீர்ப்பதாக போலியான மனநிலை உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 2.8 மில்லியன் டொலரை திருப்பிச் செலுத்தாமல் எங்க ளிடம் காணப்படும் நிலையிலே அந்த பணத்தை பயன்படுத்தி இறக்குமதிகளை மேற்கொள்ள முடிகின்றதே தவிர வேறொன்றுமல்ல.

5.3 மில்லியன் டொலர் கடனாக பெற்ற பணம் வட்டி உட்பட திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை காணப்படுகிறது. அதனை தீர்க்கவே இலாபமீட்டும் பெற் றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை மற்றும் நீர் வழங்கல் அதிகார சபை போன்ற மக்களுக்கு சேவை வழங்கும் நிறுவனங்களைத் தாரை

வார்க்கும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

சீனாவிலிருந்து உர இறக்குமதி உட்பட பல்வேறு ஊழல்களை ஊடகங்கள் வெளியிட்டிருந்த நிலையி8ல் தற்போது ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டு போட வேண்டிய நிலை அரசிற்கு காணப்படுகின்றது. கடந்த காலங்களில் ஊடகவியளாளர்கள் தாக்கப்பட் டதைப் போன்றும் கொல்லப்பட்டதைப் போன்றும் தற்போதும் ஊடக ங்களை அடக்குவதற்கான சட்டங் களை கொண்டுவரவுள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினை உணர்ச் சிபூர்வமான பிரச்சினையாகும். கடந்த 30 வருட யுத்தத்தால் உயிர் , உடைமைகளை இழந்து பரிதவித்த மக்கள். யுத்தம் முடிந்து 13 வருடம் கடக்கும் நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினையை பேரம் பேசும் நிகழ்ச்சியாகவும் அரசியலை தக்க வைப்பதற்கான நிகழ்ச்சியாகவாகவும் ராஜபக்சாக்களும் ரணிலும் காணப்படுகின்றார்கள்.

தமிழ் மக்களின் இரத்தங்களை சூடாக்கி குளிர்காயும் நபர்களின் தலைவராக சம்பந்தன் ஐயா காணப்படுகின்றார். கடந்த காலம் முதற் கொண்டு தீர்வு எதிர்காலத்தில் வரும் எனவும் கடும் நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளதாக கருத்து வெளியிடு வதில் சம்பந்தன் ஐயா சிறந்தவராக காணப்படுகின்றார்.

கடந்த காலங்களில் இனக்கலவரம் போன்ற மோசமான செயற்பாடுகளு க்கு தலைமை தாங்கிய ரணிலிடம் எந்தவிதமான தமிழர்களுக்கான தீர்வும் இல்லை. சம்பந்தன் போன்றவர்களை தனது அதிகாரங்களை தக் கவைப்பதற்காக பகடைக்காய்களாக பயன்படுத்துகின்றார் எனவும் தெரி வித்தார்.

## சிறுவர் பாதுகாப்பு குழு மற்றும் பால் நிலை சார் வன்முறைக் கெதிரான செயலணிக் குழுக்கூட்டம்



காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் காரைதீவு சிறுவர் பாதுகாப்பு குழு மற்றும் பால் நிலை சார் வன்முறைக் கெதிரான செயலணிக் குழுக்கூட்டம் இடம்பெற்றது.

இதன் போது சிறுவர் மற்றும் பெண்கள் பாது காப்பு அபிவிருத்தி வலுவூட்டல் தொடர்பாக காரைதீவு பிரதேச சபை செயலாளர், காரை தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகள் உட்பட அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன பிரதி நிதிகள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பல ரும் கலந்து கொண்டனர்.

இதன் போது சிறுவர் மற்றும் பெண்கள் துஷ் பிரயோகம் போன்ற வன்முறைக்கு போதை வஸ்து பாவனை காரணம் எனவும் அதனை எவ்வாறு முறியடிக்கலாம் என்றும் கலந்து ரையாடப்பட்டது.



காட்டு யானைகளின் தாக்குதலால் சொத்தழிவுக்குள்ளாகிய மாவடிப்பள்ளி-கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் பயனாளிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு காசோலைகள் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்ட போது. அருகில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதை காணலாம்.

## நாளை கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை திறக்கப்படும்!



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடி வேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை நாளை( 12) திங்கட்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்படும். மீண்டும் அது ஜூன் 25 ஆம் திகதி மூடப்படும்

கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 4 திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.
கடந்த வருடம் 28820 பேர் காட்டுப் பாதையில் பயணித்திருந்தனர். இம்முறை 45 ஆயிரம் பேர் அளவில் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

## சாய்ந்தமருதில் புகைத்தல் மற்றும் மதுவுக்கு எதிராக வீதிக்கு களமிறங்கிய புத்திஜீவிகள்



சாய்ந்தமருதில் சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்த மருது பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் முழு அனுசரனையில் " புகைத்தலில் இருந்து மீண்ட ஒரு கிராமம் " மாபெரும் எதிர்ப்பு பேரணி நேற்று சனிக்கிழமை (10) காலை 9 மணிக்கு சாய்ந்த மருது ஸாஹிறாக் கல்லூரி வீதி முன்றலில் இருந்து சாய்ந்தமருது பிரதான வீதி வழியாக மாளிகா சந்தியில் நிறைவடைந்தது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நசீர், நிர்வாக பணிப்பாளர் தபாலதிபர் யூ.எல்.எம். பைசர், நிதிப் பணிப்பாளர் முன்னாள் சாய்ந்தமது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிக்கா, சாய்ந்த மருது மாளிகைக்காடு பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் அல்ஹாஜ் ஏ.எம்.ஹிபத்துல் கரீம், சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட் உள்ளிட்ட பிரதேச செயலக உயர் அதிகாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமுதாய அடிப்படை அமைப்புகளின் பிரதிநிதிகள், கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் உறுப்பினர்கள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணியின் போது கிழக்கு நட்பு ஒன்றியத்தினால் அச்சிடப்பட்ட விழிப்புணர்வு ஸ்டிக்கர் வர்த்தக நிலையங்களில் ஒட்டப்படவுள் ளதுடன் புகைத்தல் எதிர்ப்பு தின கொடி விற்பனையும் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பூரண ஒத்துழைப்பினை சாய்ந்தமருது பிரதேச வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் வழங்கியதுடன் மக்களுக்கு விழிப்பூட்டும் பிரச்சாரங்களும் இடம்பெற்றது.

## சாய்ந்தமருதில் மாபெரும் இரத்ததான முகாம் : இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்!




வைத்தியசாலையில் ஏற்படும் குருதி வங்கியின் குருதி பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக "உதிரம் கொடுத்து உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளில் இரத்த தான முகாம் ஒன்று சாய்ந்தமருது USF ஸ்ரீலங்கா அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை காலை 8.30 தொடக்கம் மாலை வரை சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் அமைப்பின் தலைவர் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஜி. அன்வர் தலைமையில் இடம்பெற்றது.

இவ் இரத்ததான முகாமில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.பி. சரத் சந்திரபால, இலங்கை பொதுசேவை ஆணைக்குழு முன்னாள் உறுப்பினர், சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம். சலீம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட உதவிப்பணிப்பாளர் டவலியு.ஜீ.ஏ. எஸ்.தமயந்தி, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாரக் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். சமிழுள் இலாஹி உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலை இரத்தவங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி உட்பட தாதியர்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்ட இந்த ரத்த தான நிகழ்வில் சாய்ந்தமருது USF ஸ்ரீலங்கா அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், இளைஞர்கள், பிரமுகர்கள் எனப்பலரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.



அ. கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேனி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |








இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.